செய்தி மூன்று

# ஒரே புதிய மனிதனின் ஆக்கக்கூறு—சகலத்தையும் உள்ளடக்கிய, பரந்தகன்ற கிறிஸ்து கலாச்சாரத்தை இடமாற்றுதல்

வேத வாசிப்பு: கொலோ. 1:15-18, 27; 2:9-10, 16-18; 3:4, 10-11

**I. நாம் கொலோசெயர் புத்தகத்தின் ஆழங்களுக்குள் சென்றால், இந்தப் புத்தகத்தில் பவுல் மனிதக் கலாச்சாரத்தின் மறைவான காரியங்களோடு இடைபடுகிறான் என்பதைப் பார்ப்போம்:**

A. கொலோசெயர் 3:11இல் அந்நியன் என்ற வார்த்தையைப் பவுல் பயன்படுத்துதல், இந்த நிருபம் கலாச்சாரத்தோடு இடைபடுகிறது என்பதற்கான பலமான அறிகுறியாகும்.

B. கலாச்சாரம், நாம் உயிர்வாழ்வதற்கும், நம் இருத்தலைப் பேணுவதற்கும் நாம் உருவாக்கிய முறைபடுத்தப்பட்ட ஒழுங்காகும்—ஆதி. 4:16-22:

1. கலாச்சாரம், ஒவ்வொரு மனிதனும் தன்னையறியாமலேயே தானாகவே வாழும் வாழ்க்கையாகும்—எபே. 2:2-3; 4:17.
2. உலகமெங்கும் மக்கள் தங்கள் கலாச்சாரத்தின் ஆதிக்கத்தின் கீழ் உள்ளனர்.

C. கொலோசெயில் இருந்த விசுவாசிகள்மீது கலாச்சாரம் ஒரு பலமான ஆதிக்கம் செலுத்தியதுபோல, இன்று கலாச்சாரம் நம்மீது ஒரு பலமான ஆதிக்கம் செலுத்துகிறது—கொலோ. 2:8-10, 16-18:

1. அறியாமலேயே, நாம் பிறந்திருக்கும் கலாச்சாரத்தின் ஆதிக்கத்தின்கீழ் நாம் இருக்கிறோம்; இந்தக் கலாச்சாரத்தின் மூலக்கூறுகள் நம் ஆள்தத்துவத்தின் பகுதியாக உள்ளன—கலா. 4:3, 9; கொலோ. 2:8, 20.
2. நாம் சபை வாழ்க்கைக்குள் வந்தபோது, நம்மோடு நம் கலாச்சாரத்தையும் கொண்டுவந்து விட்டோம், இந்தக் கலாச்சாரம் கிறிஸ்து மற்றும் சபை வாழ்க்கையின் நம் அனுபவமகிழ்ச்சிக்குக் குழிபறிக்கிறது.
3. சபை வாழ்க்கையின் ஒப்பற்ற மூலக்கூறான கிறிஸ்து, ஒரு பெருமளவுக்கு, கலாச்சாரத்தால் இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார்—வ. 8; 3:11:
   a. ஆழ்மனதிலும் அறியாமலும் நாம் எல்லோரும் நம் கலாச்சாரத்தைப் பொக்கிஷமாகக் கருதுகிறோம், நம் குறிப்பிட்ட கலாச்சாரப் பின்புலத்தின்மீது ஓர் உயர்வான மதிப்பு வைத்திருக்கிறோம்.
   b. சபை வாழ்க்கையில் கிறிஸ்து வேறு எதையும் விட அதிகமாய்க் கலாச்சாரத்தால் இடமாற்றப்பட்டுள்ளார்—வ. 11.

**II. சகலத்தையும் உள்ளடக்கிய, பரந்தகன்ற கிறஸ்து தேவனுடைய பொருளாட்சியில் எல்லாமுமாக இருக்கிறார் என்று கொலோசெயர் புத்தகம் வெளிப்படுத்துகிறது—1:15-18, 27:**

A. இந்த அற்புதமான கிறிஸ்து நமக்கு எல்லாமுமாக இருப்பதைப் பற்றிய ஒரு தெளிவான தரிசனம் நமக்குத் தேவை.

B. இப்படிப்பட்ட தரிசனமானது, கிறிஸ்து மற்றும் சபை வாழ்க்கையின் அனுபவத்தின்மீது கலாச்சாரம் செலுத்தும் ஆதிக்கத்தை முடிவுகட்டும், அப்போது, கலாச்சாரத்தால் பண்பட்ட மக்களாக இருப்பதற்குப் பதிலாக, நாம் கிறிஸ்துவால் ஆக்கிரமிக்கப்பட்டு, உடைமையாக்கப்பட்டு, அவரைக்கொண்டு பூரிதமாக்கப்பட்டவர்களாக இருப்போம்—3:11.

**III. முதன்மையான, சகலத்தையும் உள்ளடக்கிய, பரந்தகன்ற கிறிஸ்து நம் ஜீவனாகவும், ஒரே புதிய மனிதனின் ஒப்பற்ற ஆக்கக்கூறாகவும் இருக்கிறார்—வவ. 4, 10-11:**

A. புதிய மனிதனாக சபையின் ஆக்கக்கூறு கிறிஸ்துவே, கிறிஸ்து மட்டுமே; சபையின் உள்ளடக்கம் சகலத்தையும் உள்ளடக்கிய, பரந்தகன்ற கிறிஸ்துவே அன்றி வேறொன்றுமல்ல—1:15-18; 2:9-10.

B. நம் ஜீவனாகவும் புதிய மனிதனின் ஆக்கக்கூறாகவும் உள்ள சகலத்தையும் உள்ளடக்கிய பரந்தகன்ற கிறிஸ்து தம்மைக் கொண்டு நம் கலாச்சாரத்தை இடமாற்றுகிறார்—3:11.

C. கிறிஸ்துவை நம் பங்காக அனுபவித்துமகிழும் விளைவு என்னவென்றால், நாம் அவரை ஒரே புதிய மனிதனின் உள்ளடக்கமாகவும் ஆக்கக்கூறாகவும் அனுபவிக்கிறோம், உச்சநிலையில், நாம் அனுபவித்துமகிழ்கிற கிறிஸ்து புதிய மனிதனின் ஆக்கக்கூறாக ஆகிவிடுகிறார்—1:12; 3:11.

D. கொலோசெயர் 3:11இன்படி, புதிய மனிதனில் பல்வேறு கலாச்சார வேறுபாடுகள் தொடர்ந்து இருப்பதற்கு எந்த வாய்ப்பும் இல்லை:

1. ஒரே புதிய மனிதனில் கலாச்சார வேறுபாடுகள் எதுவும் இல்லை, ஏனென்றால் புதிய மனிதனின் ஒவ்வொரு பகுதியும் கிறிஸ்துவைக்கொண்டு கட்டியமைக்கப்பட்டிருக்கிறது—வ. 11.
2. புதிய மனிதனாக சபையில், பிராந்திய, கலாச்சார, அல்லது தேசிய வேறுபாடுகளுக்கு இடமில்லை, மேலும், எந்தவொரு இன, தேசிய, கலாச்சார, அல்லது சமூக அந்தஸ்துக்கும் இடமில்லை.

E. கிறிஸ்து புதிய மனிதனின் ஒப்பற்ற ஆக்கக்கூறு என்பதால், இந்தப் புதிய மனிதனின் பகுதியாக உள்ள விசுவாசிகளில் வேறுபாடுகள் இருக்கக் கூடாது, சபைகள் மத்தியிலும் வேறுபாடுகள் இருக்கக் கூடாது—1 கொரி. 4:17; வெளி. 1:12, 20; 22:16.

**IV. புதிய மனிதனின் ஆக்கக்கூறாக கிறிஸ்து எல்லாராகவும் எல்லாரிலும் இருக்கிறார்; கிறிஸ்து எல்லா அவயவங்களாகவும் இருக்கிறார், அவர் எல்லா அவயவங்களிலும் இருக்கிறார்—கொலோ. 3:11:**

A. புதிய மனிதனாக சபையில், கிறிஸ்து எல்லாருமாக இருக்கிறார், அவர் எல்லாரிலும் இருக்கிறார்—1:27; 3:11.

B. ஒரு பக்கம், புதிய மனிதனில் இயற்கையான நபருக்கு இடமில்லை, ஏனென்றால், கிறிஸ்து எல்லா அவயவங்களாக இருக்கிறார்.

C. மறுபக்கம், கிறிஸ்து எல்லாரிலும் இருக்கிறார் என்ற உண்மை, இந்த அவயவங்கள் கிறிஸ்து இல்லாமல் அல்ல, மாறாக தங்களுக்குள் கிறிஸ்துவை உள்வசிக்கப்பெற்ற அவயவங்களாகத் தொடர்ந்து நீடிக்கின்றன என்று சுட்டிக்காட்டுகிறது—1:27.

D. நாம் கிறிஸ்துவை நம் ஜீவனாகவும் கட்டமைப்பாகவும் எடுத்துக்கொள்ளும்போது, நாம் கிறிஸ்துவோடு ஒன்றாய் இருக்கிறோம் என்றும் கிறிஸ்து நாமாக இருக்கிறார் என்றும் ஓர் ஆழமான உணர்வு நமக்குள் ஏற்படுகிறது, அப்போது, கிறிஸ்து நம்மில் இருக்கிறார் என்ற இன்னும் அதிக ஆழமான உணர்வு புறத்தூண்டிதலின்றி நமக்கு ஏற்படுகிறது—3:4.

E. புதிய மனிதனாகிய சபையில் கிறிஸ்துவே எல்லாமாய் இருக்கிறார்; இது எல்லா விசுவாசிகளும் கிறிஸ்துவால் கட்டியமைக்கப்பட்டாக வேண்டும் என்று மறைவாகக் காட்டுகிறது—1:15-18; 2:16-17; 3:4, 10-11:

1. நாம் கிறிஸ்துவால் ஊடுருவவியாபிக்கப்படவும் கிறிஸ்துவைக்கொண்டு பூரிதமாக்கப்படவும், கிறிஸ்து நம் ஆள்தத்துவத்திற்குள் ஜீவாதாரரீதியில் அடித்துருவாக்கப்படவும் வேண்டும்—கலா. 4:19; எபே. 3:17.
2. இறுதியில், நாம் கிறிஸ்துவால் இடமாற்றப்படுவோம், அப்போது, நிஜத்தில் கிறிஸ்து எல்லாராகவும் எல்லாரிலும் இருப்பார்; அவர் புதிய மனிதனின் ஒவ்வொரு பகுதியாகவும் இருப்பார்—கொலோ. 3:11.

F. எல்லா இயற்கை வேறுபாடுகளும் அகற்றப்பட்டு ஒவ்வொருவரும் கிறிஸ்துவைக்கொண்டு கட்டியமைக்கப்படும்வரை நம்மை ஊடுருவவியாபித்து நம்மை இடமாற்றம் செய்கிற, எல்லா பரிசுத்தவான்களிலும் உள்ள கிறிஸ்துவே புதிய மனிதன்—கலா. 4:19; எபே. 3:17; கொலோ. 1:27.

G. கிறிஸ்துவின் போதுமான அனுபவத்துடன் சகலத்தையும் உள்ளடக்கிய பரந்தகன்ற கிறிஸ்துவின் தரிசனம் நம்மிடம் இருக்கும்போது, ஒரே புதிய மனிதன் நடைமுறைக்குரிய வழியில் நம் மத்தியில் தோன்றுவான், அப்போது, புதிய மனிதனின் வாழ்க்கையை நாம் உணர்ந்தறிவோம்—3:10-17; பிலே. 10-16.

H. கிறிஸ்து எல்லா பரிசுத்தவான்களின் வாழ்க்கையாக இருந்தால் மட்டுமே, அவர் புதிய மனிதனில் இருப்பார், எல்லா பரிசுத்தவான்களும்கூட தங்கள் தேசியம் என்னவாக இருந்தாலும் கிறிஸ்துவை வாழ்வார்கள்; அப்போது, ஒரு நிஜமான மற்றும் நடைமுறை வழியில், கிறிஸ்து புதிய மனிதனின் எல்லா அவயவங்களாகவும் இருப்பார்—கொலோ. 3:11; பிலி. 1:21.

**V. புதிய எருசலேம், ஒரே புதிய மனிதனின் இறுதி முழுநிறைவேற்றமாக இருக்கும்—எபே. 2:15-16; 4:24; கொலோ. 3:10-11; வெளி. 21:2, 9-10:**

A. நாம் புதிய எருசலேமாக ஆகும்போது, பிரபஞ்சளாவிய ஒரே புதிய மனிதனின் வாழ்க்கையை நாம் அனுபவித்துமகிழ்வோம்.

B. நம் கலாச்சாரத்தை இடமாற்ற, தம்மைக் கொண்டு நம்மைக் கட்டியமைக்க, நிஜத்திலும் சரி நடைமுறையிலும் சரி, நம் அனைவரையுமே ஒரே புதிய மனதினின் பகுதியாக்க, சகலத்தையும் உள்ளடக்கிய பரந்தகன்ற கிறிஸ்துவை அனுமதிப்பதன் மூலம், இந்த அனுபவமகிழ்ச்சியின் முன்ருசியை நாம் இன்று பெறலாம்—கொலோ. 1:27; 2:10; 3:4, 10-11.

*© 2020 Living Stream Ministry*